# நம்மை எதிர்நோக்கியுள்ள சவால்கள்



கலாநிதி கா. சிவத்தம்பி

பதிப்பாசிரியர்

பொன்னீலன்

# நம்மை எதிர்நோக்கியுள்ள சவால்கள்

**கலாநிதி. கா. சிவத்தம்பி**

*(கோவையில் 2002 மே 24, 25, 26 ஆகிய நாட்களில் நடைபெற்ற தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற 40வது ஆண்டு நிறைவுச் சிறப்பு மாநாட்டில் ஆற்றிய உரைகள்)*

*பதிப்பாசிரியர்*

**பொன்னீலன்**

*வெளியீடு*

*தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்*
*பாலன் இல்லம்,*
*19, சிவாஜி கணேசன் சாலை,*
*சென்னை - 600 017.*

படையல்

கலாநிதி கைலாசபதி அவர்களுக்கு

விலை ரூ. 10

படிகள் வேண்டுவோர் தொடர்பு கொள்க

பொன்னீலன்

மணிகட்டிப்பொட்டல்

கன்னியாகுமரி மாவட்டம் - 629 501.

# பதிப்பாசிரியர் குறிப்பு

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தன் நாற்பதாவது ஆண்டு நிறைவுச் சிறப்பு மாநாட்டைக் கோவையில் 2002 – மே 24, 25, 26 ஆகிய நாட்களில் கொண்டாடியது. இந்தக் கொண்டாட்டங்களின் சிகரமாகத் தமிழறிஞர் கலாநிதி கா. சிவத்தம்பி அவர்கள் மே 24 அன்று தொடக்க விழாவின் போது ஆற்றிய தொடக்க உரையையும், 25 அன்று "ரகுநாதன் வாழ்வும் பணியும்" நூல் வெளியீட்டு விழாவின் போது ஆற்றிய தலைமையுரையையும் இந்தச் சிறப்புச் சிறு வெளியீடாகத் தங்களுக்குத் தருவதில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மகிழ்ச்சி கொள்ளுகிறது.

கலாநிதி சிவத்தம்பி அவர்களின் ஆழமான உரை தமிழக மார்க்சிய மற்றும் ஜனநாயகச் சிந்தனையாளர்களால் விரிவாக விவாதிக்கப்பட வேண்டும் என்று பெருமன்றம் விரும்புகிறது. மக்கள் கலை இலக்கிய வளர்ச்சிக்கு இது பெரிய உத்வேகம் தரும் என்று நம்புகிறது. இக்கருத்தரங்குக்காக கலாநிதி சிவத்தம்பி அவர்களை அழைத்துவர மாநாட்டு வரவேற்புக் குழுத் தோழர்கள் எடுத்துக் கொண்ட தொடர்ந்த முயற்சிகளை வெளியீட்டுக் குழு நன்றியோடு இங்கே நினைவு கூர்கிறது.

தம் பல்வேறு சிரமங்களையும் பொருட்படுத்தாமல் சிவத்தம்பி அவர்கள் கோவைக்கு வருகை தந்து, மிகுந்த உற்சாகத்தோடு இரண்டு நாள் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு உரையாற்றியது மாநாட்டுக்கு அவர் சேர்த்த பெருஞ்சிறப்பாகும். அவரோடு கோவை வந்து நிகழ்ச்சிகள் சிறப்பாக அமையப் பெரிதும் ஒத்துழைப்புத் தந்த அவருடைய மதிப்புக்குரிய துணைவியார் அவர்களுக்கும் பெருமன்றம் தன் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

பேச்சுக்களைப் பதிவு செய்து தந்த வரவேற்புக் குழுப் பொறுப்பாளர்கள், வெளியிட உதவிய வெளியீட்டுச் குழுச் செயலாளர் தோழர் எஸ். ரத்தினவேலு, கையெழுத்துப் படியைப் பார்வையிட்டும், சில பிழைகளைத் திருத்தியும் உதவிய பெருமன்றச் செயலாளர் தோழர். சி. சொக்கலிங்கம், அச்சிட்டு நூலாக்க உதவிய முனைவர். நா. ராமச்சந்திரன், அழகாக அச்சிட்ட ரிஷி டிடிபி ஆகியோருக்கும் வெளியீட்டுக் குழு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

*மணிகட்டிப்பொட்டல்,*
*14 - 09 - 2002*

பொன்னீலன்,
பொதுச் செயலாளர்.

## 2002 மே 24

## தொடக்க விழா உரை

இந்த பிரதேசத்துடைய வளங்களின் சின்னமாக விளங்குகின்ற பெரியார் நா. மகாலிங்கம் அவர்களே,

இந்தச் சிறப்பு மாநாட்டின் தலைமைக்கு மிகவும் பொருத்தமான, பெருமதிப்புக்குரிய கவிஞரும் பேராசிரியருமான என் இனிய நண்பர் சிற்பி அவர்களே,

இந்தக் கலை இலக்கியப் பெருமன்றத்தின் நடப்புக் காலப் பொதுச் செயலாளராக இருந்து மிகுந்த தூர திருஷ்டியுடன் மிகப் பெரிய கருமங்களை ஆற்றுகின்ற தோழமைக்குரிய நண்பர் பொன்னீலன் அவர்களே,

இந்த நாட்டின் பொதுவுடமை வரலாற்றில் இலக்கிய நுகர்வில் தனக்கென ஒரு இடம் பிடித்துள்ள மதிப்புக்குரிய தோழர் பாண்டியன் அவர்களே,

எல்லோரும் கவிஞராக இருக்கலாம். ஒருவர் தான் கவிக்கோவாக இருக்க முடியும். அந்தப் பால்வீதியின் நண்பர் அப்துல் ரகுமான் அவர்களே, மதிப்புக்குரிய மேயர் அவர்களே,

நண்பர்களே,

உண்மையில், தமிழ் மரபில், வீரனுக்கு, வெற்றிகளை ஈட்டியவனுக்கு, பேராசனம் கிடைப்பதுண்டு. ஆனால் அனுதாபத்தின் காரணமாகவும் அப்படியான ஒரு ஆசனம் கிடைக்கும் என்பதற்கு இன்று நல்ல உதாரணம் இது என்பதை மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக் கொண்டு, தொடக்கவுரையாகச் சில கருத்துக்களைப் பரிமாற விரும்புகின்றேன்.

மதிப்புக்குரிய நண்பர் நாவலாசிரியர் பொன்னீலன் அவர்கள் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் 40-வது ஆண்டு நிறைவு விழாவில் நாம் மனதில் கொள்ள வேண்டியவற்றைப் பற்றிக் கூறினார். அது கோவையிலேயே நிகழ்வது பற்றிய பொருத்தப் பாட்டினை நமது கொங்குவேள் எடுத்துக் கூறினார். உண்மையில் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்தமைக்காக நண்பர் சுப்பிரமணியம் மற்றும் எல்லா நண்பர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டு காரணங்கள்: ஒன்று தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது,

இரண்டாவது - எங்கள் மதிப்புக்குரிய ரகுநாதன் அவர்களின் வாழ்வின் போது நாங்கள் கையளிக்க வேண்டும் என்று விரும்பிய நூலை, அவர் மறைவின் பின்னராவது அவருக்குச் சமர்ப்பிப்பது.

நண்பர்களே, 40 ஆண்டுகள் வரலாறு உள்ள ஒரு நிறுவனத்தின் வரலாறு அல்லது, தொழில்பாடு பற்றிய சிந்தனை அவசியம் என்று நான் கருதினேன். இந்த நாடும், இப்போது தென் ஆசியா என்று சொல்லப்படுகின்ற புவியியல் கூட்டிலுள்ள வேறு பல நாடுகளும் பிரித்தானியக் காலனித்துவத்தின் கீழ் இருந்த பொழுது, அந்தக் காலனித்துவ எதிர்ப்பின் ஓர் அலகாக நாம் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட சில உந்துதல்களை வைத்துக் கொண்டு, நாமும் ஏறத்தாழ இந்தப் பகுதியிலுள்ள எல்லோருமே நமது பண்பாடுகளை மீள்கண்டுபிடிப்புச் செய்தோம். நாங்களே மறந்து போன நமது பெருமைகளை, புதிய ஆயுதங்களைக் கொண்டு, புதிய கருவிகளைக் கொண்டு நாம் பார்ப்பதற்கு வாய்ப்புகள் கிடைத்தன. அவற்றுக்குள்ளே நாங்கள் அந்தத் தொழில் நுட்பங்களோடு சென்றோம். சென்ற பொழுதில் இரண்டு நிலைகள் தொழில்பட்டன என்று கூறலாம். ஒன்று, அவ்வாறு செய்வதன் மூலம் கரீபியன் தீவிலே ஏற்பட்டது போல, தென் அமெரிக்காவிலே ஏற்பட்டது போல, ஒரு நிலைமை ஏற்படாமல் எங்களுடைய அடையாளங்களை, எங்கள் பண்பாடுகளை நாங்கள் பேணிக் கொள்ளலாம் என்பது. அது அக்காலத்தில் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலே ஏற்பட்ட ஒரு முக்கியமான விசயம். இந்தப் பிரதேசங்கள் பண்பாடுகள் மட்டுமல்ல, நாகரீகங்களும் நிறைந்த பிரதேசமாக விளங்கியது. எனவே நம் அடையாளங்களை வலியுறுத்துவதன் மூலம், நாம் அன்னியப் பிடிப்பிலிருந்து விடுபடுவதற்கு அதனையொரு கோலாகப் பயன்படுத்திக் கொண்டோம்.

அது மாத்திரம் அல்ல, அதற்கு மேலாக இன்னும் ஒன்று நடந்தது. அதாவது நாம் விரும்பியோ, விரும்பாமலோ மாறி வருகின்ற வரலாற்றுச் சூழலில், அந்தச் சூழலோடு நம்மை இணைத்துக் கொள்ள நாம் நம்மை தயார்படுத்திக் கொள்ளவும், இந்த அடையாளங்களைக் காண வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இந்த இரண்டு வகை நிலையையும் பார்க்கின்ற பொழுது, குறிப்பாக காலனித்துவம் முடிந்து நாங்கள் சுதந்திர நாடுகளாக வருகின்ற பொழுதோ; அல்லது பின் காலனித்துவம் என்கின்ற

தொழிற்பாடு ஏற்படுகின்ற பொழுதோ, நமக்கு ஏற்பட்ட முக்கியமான அம்சம் என்னவென்றால், இந்த மீள்கண்டுபிடிப்பு செய்யப்பட்ட பண்பாடு இந்த மீள்கண்டுபிடிப்புச் செய்யப்பட்ட பெறுமானங்களை - விழுமியங்கள் ஆகியவை - நாம் சமூகத்திலிருந்து ஒதுங்கிக் கொள்ளுவதற்காக ஒருவரிலிருந்து மற்றொருவர் மேல் என்று வற்புறுத்துவதற்காக, பிறரை ஆதிக்கம் செய்யத் தங்களுக்குக் காலம் காலமாக உரிமையுண்டு என்பதை எடுத்துக் காட்டுவதற்காகப் பயன்படுத்துகிற ஆயுதமாகவும் பயன்படுகிற ஒரு ஆபத்தும் உள்ள ஒன்று என்பது நிச்சயமாக 47-க்கு பிறகு ஏற்பட்டது. அந்த நிலையில், இன்னொரு குழு அதிலிருந்து விடுபட்டது. நமது பண்பாட்டைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டிய தேவைகள் அதற்கு ஏற்பட்டது. அது வெறும் மீட்பு வாதத்துக்குள் போகாமல், இந்தப் பண்பாட்டைப் புதுப்பிப்பதில், அது ஆர்வம் காட்டியது. அதற்கான காரணமும் இருந்தது. ஒன்று: முன்னர் நிகழாத ஒரு ஜனநாயகமயப்பாடு (Democratisation) இங்கு கிடைத்த சமமான கல்வி, முன்னேற்றம். அந்தப் புதிய நோக்குக்களை வரவேற்கின்ற அதே வேளையில், புதிய சமூக மாற்றத்தை விரும்பிய சிந்தனையாளர்கள் இந்தப் பண்பாட்டை இனம் கண்டு கொண்டார்கள். சமூக மாற்றத்தோடு சம்மந்தப்படுபவர்களும் இதனைப் பார்த்தார்கள். அப்படிப் பார்க்கிற பொழுதுதான் சமூகத்தின் முற்போக்கு வாதம், சமூகத்தில் முன்னேற்றம் என்கின்ற கருத்துக்கள் வரத் தொடங்கின.

1917ன் பின்னர் இது நிச்சயமாக மிக முக்கியமான விடயமாகிறது. அதிலே குறிப்பாக இந்திய வரலாற்றில், அப்போதிருந்த இந்திய உபகண்டத்தில் 30-களிலே தொடங்கப்பட்ட முற்போக்கு எழுத்தாளர் சங்கம் (Progressive Writers Association) அது பெங்களாதேசிலும், பாகிஸ்தானிலும், இந்தியாவிலும், இலங்கையிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தத் தேடலின் ஊடே ஒரு முக்கியமான விடயம் நடைபெற்றது. என்னவென்றால் இந்தச் சிந்தனையாளர்கள் நமது பண்பாட்டைத் தேடுகிற பொழுது, நமது பண்பாட்டை மீள்கண்டுபிடிப்புச் செய்கிற பொழுது, அந்தப் பண்பாட்டின் ஜனநாயக அம்சங்களுக்காகப் போராடினார்கள். அந்தப் பண்பாட்டில் காணப்பட்ட மறைந்து போன, வெளியே கொண்டு வரப்படாத ஜனநாயக வேர்களை இனம் கண்டு கொள்ள விரும்பினார்கள். அவற்றை அவர்கள் வலுப்படுத்த விரும்பினார்கள். அந்த வேர்களிலிருந்து புதிய தளிர்கள் மீண்டும் மீண்டும் வர வேண்டும் என்று விரும்பினார்கள். அந்த வளர்ச்சி தான் நாங்கள் கருதுகிற புதிய

முற்போக்குக் கலை இலக்கியச் சிந்தனை. தமிழில் நின்று கொண்டு, தமிழின் பழமையை ஏற்றுக் கொண்டு, பண்பாட்டை ஏற்றுக் கொண்டு, அதே வேளையில் தமிழைப் புதிய யுகத்துக்கான ஒரு கருவியாக மாற்றுகின்ற ஒரு பண்பாட்டை அது தோற்றுவிக்க விரும்பியது. இதுதான் நான் நம்புகிறேன், இந்தப் புதிய மன்றங்களின் தேவை. 60-களிலே இந்தத் தேவை பெரிதும் ஏற்பட்டது. அந்தக் கால கட்டத்திலே தான் பிற்காலத்துப் பொதுவுடமை இயக்க வரலாற்றில் அந்தந்தப் பண்பாட்டின் ஊடாகப் பொதுவுடமை இயக்கங்கள் வளர வேண்டும் என்ற சொல்லப்படப்போகின்ற ஒரு கருத்தைத் தமிழ்நாட்டில் முன்கூட்டியே விதைத்த ஜீவானந்தம் இந்தக் கலை இலக்கியப் பெருமன்றத்துக்குக் கால் ஆகிறார். ஏனென்றால் ஜீவாவினுடைய கம்யூனிஸம், வெறுமனே மேற்கத்திய நாடுகளிலிருந்து வந்தது அல்ல. ஜீவா பேசிய கம்யூனிசம் அக்காலத்தில் கம்யூனிஸ்ட்டுகள் பற்றிக் கிண்டலாகச் சொல்லப்பட்டது போன்று, எங்கேயோ மழை பெய்ய இங்கே குடை பிடித்த கம்யூனிசம் அல்ல. அது கம்பனுக்குள்ளால் வந்த கம்யூனிசம். அது பாரதிக்குள்ளால் வந்த கம்யூனிசம். கம்பனைத் தம் பக்கம் இழுத்துக் கொண்ட கம்யூனிசம். பாரதியை நிலைநிறுத்திய கம்யூனிசம்.

இந்த மாபெரும் வளர்ச்சியின் தன்மைதான் இந்த மாநாடு.

என்னைப் பொறுத்த அளவில் இந்த இயக்கங்கள் இரண்டு மூன்று பணிகளைச் செய்கின்றன. ஒன்று. புதியவனவற்றைக் கொண்டு வருகின்றன. நண்பர் பொன்னீலன் தந்த பட்டியல், முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் காணப்படுகின்ற பட்டியல், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் காணப்படுகின்ற பட்டியல், தமிழ் இலக்கியத்தின் தடத்தையே இவர்கள் எல்லாரும் மாற்றியிருக்கிறார்கள். அது தமிழுக்குக் கிடைத்த பொதுவான வெற்றி.

தமிழை ஒரு புதிய ஜனநாயகச் சூழலில், புதிய உலகச் சூழலில், உலகத்தின் மொழிகளோடு சமமாக நிற்கத்தக்க நிலைமையை ஏற்படுத்திய படைப்பாளிகள் நம்மிடம் இருக்கிறார்கள். நவீன உலகில் புதுமைப்பித்தனின் சிறுகதைகளோ நாம் உலகத்திலுள்ள எந்த இலக்கிய மன்றத்தின் கதவையும் தட்டலாம். அப்படியான அந்த நிலையில் நாங்கள் புதிய பாரம்பரியங்களை ஏற்படுத்தி கொண்டோம். எனவே தான் இந்த முறையிலேயே வந்த புதிய விடயங்களையும் மாற்றிய பெருமை ஒன்று கோவைக்கு உண்டு. நண்பர் சிற்பிக்கும்

அவருடைய நண்பருக்கும் உண்டு. புதுக்கவிதை என்ற எதிர்த்துப் பேசப்பட்ட ஒரு வடிவத்தை வசன கவிதை என்று நின்ற கவிதை வடிவத்தை ஜனநாயகமயப்படுத்தியது தமிழ்மயப்படுத்தியது வானம்பாடிகள் என்கின்ற இயக்கம்.

நண்பர்களே, இன்று இந்த நாற்பதாவது ஆண்டு நிறைவுச் சிறப்பு மாநாட்டிலே, ஒரு பெரிய சவால் உள்ளது. அந்தச் சவால் இரண்டு நிலைப்பட்டது. ஒன்று, பாரம்பரியத்தின் தொடர்ச்சியைப் பேணுதல், பண்பாட்டின் தொடர்ச்சியைப் பேணுதல். இரண்டாவது, இந்த ஜனநாயகமயப்பாட்டைக் காப்பாற்றிக் கொள்ளுதல். இந்த ஜனநாயகமயப்பாட்டை நாங்கள் காப்பாற்றிக் கொள்ளத் தவறுவோமேயானால், நண்பர் சிற்பி சொன்னது போல இந்தப் புதிய மில்லினியத்தில் அழிந்து போகக் கூடிய மொழியாகத் தமிழ் நிச்சயமாக மாறிவிடும். ஏனென்றால் தமிழிலே சிந்திக்கிற பொழுது, தமிழிலே நாங்கள் எழுதத் தொடங்குகிற பொழுது, தமிழில் நின்று கொண்டு பிற மொழிகளுக்குச் செல்லுகிற பொழுது, எங்களுடைய மொழி எந்தக் காலத்திலும் அழியப் போறதில்லை. எனவே தான் இது வெறுமனே இலக்கியம் பற்றிய விடயம் அல்ல; வெறுமனே கற்பனை பற்றிய விடயம் அல்ல; இது வெறுமனே சிந்தனை பற்றிய விடயம் அல்ல; பண்பாடு பற்றிய விடயம் அல்ல.; தமிழின் இருப்புப் பற்றிய விடயம். இந்த விடயங்கள் பற்றி கவனம் செலுத்த வேண்டும் என்றும், ஜனநாயகமயப்பாட்டினுடைய தர்க்க ரீதியான முடிவுக்குச் செல்லவேண்டும் என்றும், புதிய பண்பாடுகளைக் கொண்டு வர வேண்டுமென்றும், அவற்றில் மக்களுக்கு உரியனவற்றை ஏற்று, மற்றவற்றைக் கழிக்க வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டு இந்த மாநாடு மிகச் சிறப்பாக நடக்க வேண்டுமென்ற என்னுடைய மிகபெரிய வேண்டுதலுடன் என் உரையை முடிக்கிறேன்.

***

## 25.05.2002

# "தொமுசி ரகுநாதன் வாழ்வும் பணியும்"
# நூல் வெளியீட்டு விழா தலைமையுரை

வரலாற்றுப் புகழ்மிக்க இந்தக் கோவை மாநகரில் சிறப்பாக நடைபெறுகின்ற தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் 40-வது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சிகளில், இத்தனைச் சிரமங்களுக்கு இடையிலும், நான் தருகின்ற பல்வேறு இடற்பாடுகளுக்கிடையிலும் என்னை அழைத்து எனக்குக் கௌரவம் செய்கின்ற தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத் தோழர்களுக்கும், இங்குள்ள பெருமக்களுக்கும், என் பணிவன்பான மனம் நிறைந்த உளபூர்வமான கடப்பாட்டினைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் தரும் சிரமங்களுக்கு என்னை மன்னிக்குமாறும் உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

நண்பர்களே, இந்த 40-வது அண்டு நிறைவுவிழாக் கருத்தரங்கு இரண்டு விடயங்களில் முக்கியமாகிறது. ஒன்று தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் 40 ஆண்டுகள் நிறைந்த நிலையில் இக்கலை இலக்கியப் பெருமன்றம், இது போன்ற கொள்கைகளையுடைய மற்ற இலக்கிய மன்றங்கள் எதிர்நோக்கும் சவால்கள் யாவை என்பது பற்றிய ஒரு சிந்தனை ஒரு புறமாக, அதற்கு மேலாக இந்த மாநாட்டிலே இருந்திருக்க வேண்டிய, இந்த மாநாட்டுக்கு முக்கியத்துவம் தந்திருக்க கூடிய நம்முடைய ஒரு பெரும் தோழர், மிகப் பெரிய இலக்கியவாதிகளில் ஒருவர், நண்பர் ரகுநாதன் அவர்களின் மறைவு உண்மையில் நாம் மனதிலே கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும். ரகுநாதனுக்கு இந்த விழாவில் அவரைப் பற்றின ஒரு நூலினைக் கையளிக்க வேண்டும் என்று நண்பர் பொன்னீலன் விரும்பினார். அதற்காகத் தயாரான நூலை நாம் இன்று அவர் நினைவாக இங்கு வெளியிடுகிறோம். ரகுநாதனின் மறைவு அவரது 78வது வயதிலே நிகழ்கிறது. ஈழ நாட்டில் காலஞ் சென்ற பண்டித மணி கணபதி பிள்ளை அவர்கள் காலமான பொழுது நாங்கள் ஒரு வசனம் பாவித்தோம். பண்டிதமணி காலம் ஆகி விட்டார். அந்தச் சொல் ரகுநாதனுக்கு மிக மிகப் பொருந்தும். ரகுநாதன் காலமாகிவிட்டார் என்று நினைக்காதீர்கள். "ரகுநாதன் ஒரு காலம்" ஆகிவிட்டார். மணிக்கொடி காலத்து அசைவியக்க வரலாறு, தமிழ் விமர்சன வரலாற்றின் ஒரு கட்டம், தமிழ் நவீன இலக்கியத்தின் பிதாமகர்களில் முக்கியமான

சிலரை நிலைநிறுத்துகின்ற ஒரு போராட்டம் எல்லாம் ரகுநாதனோடு நிகழ்ந்தது. ரகுநாதன் தான் வாழ்ந்த காலத்தை ஒரு காலமாக்கி ஒரு கால கட்டமாக்கித் தான் காலமானார்.

ஏறத்தாழ 1944ம் ஆண்டு முதல் இலக்கியத் தொழில் வாழ்க்கையில் புகுந்தவர். பல்திறன் உள்ள இலக்கிய ஆளுமையாக இருந்தார். ரகுநாதனுடைய கதைகளிலே வருகின்ற பாத்திரங்கள் இன்னும் நம் கண்முன்னே நிற்கின்றன. "வென்றிலன் என்ற போதும்" என்ற கதையை எந்தத் தமிழ் இலக்கிய மாணவனும் மறந்து விட முடியாது. அதே வேளையில் 'ஆனைத்தீ' என்ற கதையையும் எவரும் மறந்துவிட முடியாது. பிரிவு உபசாரத்தையும் மறந்து விட முடியாது. கன்னிகாவையும் மறந்து விட முடியாது. இவை எல்லாவற்றுக்கும் மேலாகத் திருச்சிற்றம்பலக் கவிராயரை, "அண்ணாச்சி மதனியுடன் ஆவணிக்கு வாரீகளா?" என்று திருநெல்வேலிக்கு அழைத்த கவிஞனைக் கம்பனைக் காவியமாகப் பாடிய கவிஞனை, கம்யூனிஸ்ட்டாக இருந்து கொண்டே கம்பனைக் காதலனாகப் பாடிய கவிஞனை நாம் மறந்து விட முடியாது.

இதற்கு மேலாக அவர் ஒரு இலக்கிய விமர்சகர். ஏறத்தாழ தனது 27-வது வயசிலேயே வரன்முறையான மிகப் பட்டெறிந்து போகிற - மற்றவர்களைத் துகள் துகளாக்குகிற "இலக்கிய விமர்சனம்" என்ற நூலை எழுதியவர். இலக்கிய ஆய்வாளர். இலக்கிய ஆக்கமுள்ள பல நூல்களை எழுதியவர்.

முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழம்பொருளாய் பின்னைப் புதுமைக்கும் பின்னைப் புதுமையாய் நின்றவர்கள் போன்று, பழைய இலக்கியங்களில் ஆழமான பரிச்சயம் கொண்டவர் அவர். "இளங்கோவடிகள் யார்?" என்று எழுதத் தகுந்தவராக இருந்தவர். அதே வேளையில் பாரதியாரைப் பற்றியும் அவர் எழுதினார். நான் அடிக்கடிச் சொல்வதுண்டு. தமிழிலே இரண்டு கவிஞர்கள் தான் உண்மையில் புதிய பாதை அமைத்தவர்கள். அவர்கள் இரண்டு பேரும் தான் திருப்புமுனைகள். அவர்களுக்குப் பின்னர் அதற்கு முன்னர் இருந்தது மாதிரித் தமிழ் இலக்கியம் இருக்கவில்லை. இருக்கவும் முடியாது. ஒன்று இளங்கோ, மற்றது பாரதி. கம்பன் கூட இளங்கோ தொடக்கி வைத்த பாட்டையின் கொடுமுடி, சிகரம் தான். பாரதியினுடைய பாட்டையில் வரப் போகின்ற அந்தச் சிகரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். தமிழ் இலக்கியத்தின் திருப்பு முனையாக

அமைந்த மாபெரும் கவிஞர்கள் என்று சொல்லத்தக்க மகாகவிகள் இளங்கோவைப் பற்றியும், பாரதியைப் பற்றியும் - சுருக்கமாகச் சொன்னால் - தமிழினுடைய ஜீவ ஓட்டத்தைப் பற்றிய வரலாற்றை நமக்குத் தந்தவர் ரகுநாதன். இப்படியானவர் அவர். ரகுநாதனுடைய மிகப் பெரிய சாதனையை நான் நண்பர் பொன்னீலனுக்கு டிசம்பரில் சொன்னேன். புதுமைப்பித்தனுக்கு நவீனத் தமிழ் இலக்கியத்திலுள்ள இடத்தினை நிலைநிறுத்தியது ரகுநாதன் தான். அந்த நிலைநிறுத்தலுடன் தான் நவீனத் தமிழ் இலக்கியம் கால் கொண்டது. பாரதிக்குப் பின்னர் பலர் பாடுகிறார்கள். பாரதிக்குப் பின்னால் வந்த பாடல்கள் எல்லாமே புதிய பாடல்கள் அல்ல. மணிக்கொடி காலத்திலிருந்து ஏற்படுகிற இலக்கிய மாற்றம் இருக்கிறதே அதன் பின்னர் தான் மணிக்கொடி காலத்துக்கு முந்திய எழுத்து முறைகள் தமிழ்நாட்டில் செல்லுபடியாகிற தன்மை இல்லாமல் போகிறது.

அதற்கு முந்திய கவிஞர்கள் இல்லாமல் போனார்கள். புதுக்கவிதையின் தோற்றம் வரவேண்டிய காலம், வந்த காலம். நவீன இலக்கிய விமர்சனம் பற்றி ஒரு முக்கியமான நூலை எழுதியவர் நண்பர் ரகுநாதன் அவர்கள். சிறந்த மொழி பெயர்ப்பாளராக விளங்கியவர். மிகப் பெரிய திறமை. தமிழ் இலக்கியத்தில் எவ்வளவு ஆளுமை இருந்ததோ, அதே அளவு பரிச்சியம் மற்றைய மொழி இலக்கியங்களிலேயும் அவருக்கு இருந்தது. இலக்கிய வரலாற்று ஆய்வுகளை மேற்கொண்டவர் கவிஞர் திருச்சிற்றம்பலக் கவிராயர்.

ரகுநாதனின் மறைவும், கலை இலக்கியப் பெருமன்றத்தின் 40-வது ஆண்டு நிறைவும், தமிழ் இலக்கிய உலகை இன்று எதிர்நோக்கி உள்ளது. அந்தச் சவால்கள் பற்றி எம்மை இவை சிந்திக்க வைக்கின்றன என்று கூடச் சொல்லலாம். அந்தச் சவால்கள் சில பற்றி உங்களுடன் சிறிது சிந்திக்கலாம் என்று கருதுகிறேன்.

ரகுநாதன் கலை இலக்கியப் பெருமன்றம் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் போன்ற நிறுவனங்கள் ஏற்று கொண்டுள்ள மார்க்சீய இலக்கிய விமர்சன முறைமையில் நின்று, சில கருத்தோட்டங்களைப் பார்க்கலாம் என்று கருதுகிறேன். மார்க்சீய விமர்சனம் அல்லது அணுகு முறை இரண்டு விடயங்கள் ஒன்றுடன் ஒன்று எவ்வாறு இணைந்திருக்கின்றன என்பது பற்றி பார்க்கும். ஒன்று வரலாற்றுச் சூழமைவு. (Historical Circumstances - context) மற்றது பொருளினுடைய இயங்கியல்தன்மை அல்லது டைலட்டிக்ஸ். மனித

சமூக உறவுகள் பற்றிய ஆய்வுகளில் இவை இரண்டும் முக்கியம். இவை இவற்றுக்காகவே முக்கியம் பெறுவதில்லை. மனித உறவுகளைப் பற்றி அறிந்து கொள்வதற்காக, சமூக உறவுகளை விளங்கிக் கொள்ளுவதற்காக இவை முக்கியமாகின்றன. அது கூட மார்க்சீயத்துக்கு முக்கியமில்லை. மார்க்சீயத்துக்கு எது முக்கியம் என்றால், இந்த ஊடாட்டங்கள் எவ்வாறு மனித ஒடுக்கு முறைகளுக்கு இடம் கொடுக்கிறது என்பதைப் பற்றியும் அந்த ஒடுக்கு முறைகளிலிருந்து மனிதன் எவ்வாறு விடுபடலாம் என்பதைப் பற்றியும் - பேசுவது மார்க்சீயம்.

ஒடுக்கு முறைகளின் தன்மைகள், ஒடுக்கு முறைகளிலிருந்து விலகுகின்றவற்றின் முறைமைகள், இவைப் பற்றி மார்க்சீயம் பேசுகிறது. மனிதர்களிடையே ஏற்படும் சமதீனங்களையும் (inequalities) அந்த சமதீனங்களைத் தீர்ப்பதற்கான வழி முறைகளையும் மனித நிலை நின்று பார்க்கின்ற ஒரு மெய்யியல் தத்துவம் இது வரை வரவில்லை என்கின்ற படியினால் மார்க்சீய அரசு - சோவியத் கம்யூனிஸ்ட் நாடுகளின் அரசியல் வரலாற்றின் மாற்றங்கள் ஏற்பட்டதன் பின்னரும் இந்தத் தத்துவத்துக்கு இன்னும் ஒரு வலிமை இருக்கிறது. அந்த வலிமை உணரப்படுகிறது. சமூக உற்பத்தி உறவுகளின் தன்மையிலே நாங்கள் இவற்றைப் பார்க்க வேண்டியிருக்கிறது. இதிலுள்ள முக்கியம் என்னவென்றால், மார்க்சீயம் இதனை ஏற்றுக் கொள்ளுகின்ற போது மாற்றங்களிடையே மனிதர்களைப் பார்க்கின்ற அந்தப் பணியை அது மேற்கொள்ளுகிறது. அந்தப் பணியை மேற்கொள்ளுகிற பொழுது அது இரண்டு விடயங்களைக் கவனிக்கிறது. ஒன்று அந்தப் பொருளினுடைய தனித்துவமான அம்சங்கள் யாவை? இரண்டு; இந்தத் தனித்துவமான அம்சங்களைக் கொண்ட எந்த ஒரு பொருளும், 'ரிலெட்டிவ் ஆட்டானமி'யைக் கொண்ட எந்த ஒரு பொருளும், ஒட்டு மொத்தமான சமூக உறவுகளோடு ஒட்டு மொத்தமான உற்பத்தி உறவுகளோடு, ஒட்டு மொத்தமான பொருளாதார நடைமுறைகளோடு எவ்வாறு இணைகின்றன என்பது. இந்த எடுகோளை மனதில் வைத்துக் கொண்டு, நான் முதலில் இரண்டு காலக் கட்டங்கள் பற்றிய சில அவதானிப்புகளை முன்வைக்க விரும்புகிறேன். ஒன்று ரகுநாதன் புதுமைபித்தன் முதலியோர் தொழிற்பட்ட 1940 - 1950 கால கட்டம். இரண்டாவது ஜீவா அவர்கள் பொதுவுடமைக் கட்சியின் ஒரு அங்கமாகக் கலை இலக்கியப் பெருமன்றத்தைத் தோற்றுவித்தச் சூழல். 1961ல் தமிழ் நாட்டில் இலக்கியச் சூழல் யாது? இவை யாவற்றுக்கும் மேலாக, மூன்றாவதாக இன்றைய இலக்கியச் சூழல் எது என்பது பற்றியும் பேசுவோம்.

நண்பர்களே, இந்த மூன்றையும் பார்க்கின்ற பொழுது, தமிழ்நாடு நிலைபட்ட, தமிழ்மக்கள் நிலைப்பட்ட, இலக்கியச் சவால்கள் யாவை என்பது தெரியவரும். புதுமைபித்தன் ரகுநாதன் தொழிற்பட்ட காலம், தமிழ் இலக்கியத்தின் நவீனத்துவம் ஏற்கப்பட்ட காலம். 40-50களில் இரண்டு விடயங்கள் நடைபெறுகின்றன. ஒரு பாய்ச்சலில் ஒரு புறம் புனை கதைதான் நிலையான, இந்தக் காலகட்டத்துக்கான இலக்கியச் சித்தரிப்பு முறை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. முன்னர் காவியம் செய்த பணியை அதற்கு முன்னர் அகம் புறம் செய்த பணியை, நவீன உலகத்தில், இந்தக் காலக் கட்டத்தில், தமிழ் இலக்கியத்தில் புனை கதை (Fiction) செய்கிறது. மற்றது தமிழ்க்கவிதையில் ஒரு மாற்றம் தேவை என்பது வற்புறுத்தப்படுகிறது. அந்த மாற்றம் ஓசை மாற்றமாக, உருவக மாற்றங்களாக இருக்க வேண்டும் என்கிற தேவை ஏற்படுகிறது. தோன்றிய பொழுது அதற்குப் பெயர் வைப்பதிலேயே இடர்பட்டு நாம் அதனை வசன கவிதை என்ற சொன்னோம். மறுபுறத்தில் இது நடந்து கொண்டிருக்கிற அதே வேளையில் தமிழ் அடையாளம் அரசியலில் பேணப்படுவதற்கான ஒரு— அந்தச் சொல்லை நான் ஆங்கிலத்தில் சொல்ல விரும்புகிறேன். தயவு செய்து அதை ஆங்கிலத்தில் சொல்லுவதை மன்னிக்கவும். அதை மிகச் சுலபமாகப் போராட்டம் என்று மொழி பெயர்த்து விடலாம். ஆனால் "The Struggle" என்கிற சொல்லுக்கு போராட்டம் என்கிற மொழிப்பெயர்ப்பு போதாது. அதற்குள் போராட்டம் ஒரு அம்சமாக இருக்குமே தவிர Struggle for it என்கிற பொழுது When I am struggling with water I am not fighting with water. இந்த ஸ்ட்ரகிள் என்ற சொல்லுக்கு ஒரு ஆழமான கருத்து இருக்கிறது. நாங்கள் துரதிருஷ்ட வசமாக அதனைப் போராட்டம் என்று ஒரேயடியில் மொழி பெயர்த்துவிட்டதனால், அந்த ஸ்ட்ரகிளுக்குள் உள்ள ஆழமான கருத்து வெளிவரவில்லை. தமிழ் அடையாளம் பற்றிய ஒரு ஸ்ட்ரகிள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் போராட்டம் போராட்டத்துக்கு மேலானது, போராட்டத்துக்கு உள்ளே உள்ள ஒரு தவிப்பு எல்லாம் இந்த ஸ்டரகிளுக்குள் உள்ளது. இந்தக் கட்டத்தை பாரதிதாசன் பிரதிபலிக்கிறார் என்று நான் கருதுகிறேன். அது எடுத்த வடிவங்கள், அதிலே இனங்காணப்பட்ட பிரச்சனைகள் இவை எல்லாம் சுவாரசியமானவை. இதில் மிகப் பெரிய சுவாரசியம் என்னவென்றால், பாரதியைப் பொறுத்தவரையில் ஒருநிலைப்பட்டிருந்த இந்திய தேசத்துச் சிந்தனை பிளவுண்டது. பிரிட்டானிய எதிர்ப்பு போராட்டத்தின் போது சிந்திக்காத, சிந்தித்தே இருக்க முடியாதது இது. பாரதி சொல்லுவான் இத்தனை மொழிகள், சிந்தனை ஒன்று என்று.

ஆனால் இப்பொழுது மொழிகள் முக்கியத்துவம் அடைகின்றன. Post colonialision in India has started to work. இந்தச் சூழலில் தான் தமிழகத்தில் மொழியின் அடிப்படையில் தனித்துவங்கள் பற்றிப் பேசப்பட்டது. இந்த சூழலில் தான் ஜீவா என்கின்ற ஆளுமை, பொதுவுடமை வட்டாரங்களுள் தமிழ் அரசியலுள் மிக முக்கியமான இடத்தைப் பெறத் தொடங்குகிறது. நான் ஜீவா என்ற ஆளுமையை சொல்லுவதற்கு முக்கியமான காரணம் உண்டு. ஏனென்றால் ஜீவாவுடைய வரலாறு தெரிந்தவர்களுக்குத் தெரியும். நண்பர் ஜீவபாரதியினடைய நூல்களிலிலே மிகப் பரக்க அதை நாம் காணலாம். ஜீவாவுடைய வரலாற்றைப் பார்த்தால், ஜீவா கம்யூனிசத்துக்கு வந்து சேர்ந்த அந்தப் பாதை இருக்கிறதே, மற்றைய அந்தக் காலத்து இளைஞர்கள், அறிஞர்கள், இன்டலக்சுவல்கள் வந்து சேர்ந்த பாதை அல்ல. பெரும்பாலாக அந்தக் காலத்து இளைஞர்கள் லண்டனில் இருந்து படித்து உயர்கல்விகளைப் படித்து மார்க்சீயத்தை வரலாற்று முறையாக, யாரோ ஒரு மிகப் பெரிய ஆசிரியரிடம் கற்று, கிருஷ்ணமேனனைப் போன்றவர்களோடு தொடர்பு ஏற்படுத்தி, அனைத்திந்தியாவில் தொடர்ந்து நின்று, சோசலிஸ்ட் காங்கிரசிலேயிருந்து தங்களுடையக் கல்வி மூலம் intellectual வலு மூலம் வந்தவர்கள். ஜீவா வந்த வழி வேறு. ஜீவா தனித்தமிழ் இயக்கத்தில் மறைமலை அடிகளோடு இருந்தவர். ஜீவா பெரியாரோடு இருந்தவர். படிப்படியாக ஜீவா பொதுவுடமை இயக்கத்துக்கு வந்து சேருகிறார். நான் நம்புகிறேன். தமிழ்நாட்டு அரசியலின் கர்ப்பத்தின் உள்ளே இருந்து ஜீவா வருகிறார். இது நான் முதலிலே சொன்னது போல, மிக முக்கியமான வித்தியாசம் இதனால் தமிழ்நாட்டில் பொதுவுடமை வேண்டும் என்கிற பொழுது, அவர் வர்க்கத்துக்குப் போகாமல், வர்க்க முரண்பாடுகளைப் பற்றி அதிகம் அழுத்தாமல், கம்பனுக்குப் போனார். இதனால் இவர் பாரதிக்குப் போனார். ஏனென்றால் இந்த முரண்பாடுகளற்ற உலகத்தை அவர் கம்பனுடைய கோசலத்திலே கண்டார். பாரதியினுடைய பாடல்களில் கண்டார். எல்லோருக்கும் பொதுவுடமை என்ற சொல்லை பாரதியில் கண்டார். இந்தத் தமிழின் பின்புலத்திலிருந்து, தமிழ் பண்பாட்டின் பின்புலத்திலிருந்து கம்யூனிசத்தைப் பரப்ப விரும்பினார். நான் நம்புகிறேன். இதை நான் பல தடவ சொல்லியிருக்கிறேன் ஜீவாவுடைய மிகப் பெரிய சாதனை அது என்று.

அப்போ இதன் காரணமாக - நான் சொல்லி உங்களுக்குத் தெரிய வேண்டியதில்லை - 67 லிருந்து பிரதேச தேசிய அரசியலில் மாற்றம் ஏற்படுகிறது. தேசிய சக்திகள் பிரதேச சக்திகள் இணையும்

முறைமையில் நிச்சயமாக மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்தக் காலக்கட்டம் தான் தமிழ்நாட்டில் கலை இலக்கியப் பெருமன்றம் தோன்றுகின்ற காலம். அப்போ, சமூக மாற்றத்தில் இலக்கியம் வகிக்கும் இடத்தைப் பொதுவுடமைக் கட்சி ஏற்றுக் கொள்ளுகிற அதே வேளையில், அந்த அடிப்படையில் இலக்கியத்தின் தன்மை அமைய வேண்டும் என்று அது வற்புறுத்துகிறது. அந்த இரண்டு அம்சங்களும் என்னவென்றால், ஒன்று; இலக்கியத்தின் மானுட தன்மை. (Humanism in literature) மற்றது அதனுடைய எதார்த்தப் பண்பு. (Realism in literature) இந்த அடிப்படையில் தான் கலை இலக்கியப் பெருமன்றம் வருகிறது. கலையாலும் தமிழ் இலக்கியத்தாலும் மானுடத்தை அது வற்புறுத்தத் தொடங்குகிறது. இந்த வேளையில் கம்பனுக்கும் பாரதிக்கும் சொல்ல வேண்டியிருந்ததற்கும் ஒரு காரணம் இருந்தது. என்னவென்றால் கம்பனும் பாரதியும் ஏதோ ஒரு வகையில் தாக்கப்பட்டார்கள். இதனால் உண்மையில் இன்று மார்க்சீயத்தைப் பற்றி பேசுகிற பல நண்பர்கள் பயன்படுத்துகிற ஒரு சொல்லை நான் பயன்படுத்த விரும்புகிறேன். We have to rediscover Kamban, We have to rediscover Bharathy. அந்த rediscover of கம்பன், கம்பனை ஸ்ரீ ரங்கத்திலிருந்து வெளியே கொண்டு வருவது, வைணவக் கோயில்களில் இருந்து வெளியே கொண்டு வருவது, மானுடத் தன்மையைக் கொண்டவனாக்குவது. சுருக்கமாகச் சொன்னால், நான் கோவையில் உள்ளவர்களுக்கு சொன்னாலே புரியும். ஏனென்றால் கோவைக்கிழார் இந்த ஊரைச் சார்ந்தவர். சேக்கிழாருக்குச் செய்ய முடியாததை கம்பனுக்குச் செய்கிறார் ஜீவா. இது ஒரு வரலாற்று முக்கியத்துவமுள்ள தமிழ் இலக்கிய விடயம்.

இந்த நிலையில் இருந்து தான் கம்பன் செக்குலர் ஆக்கப்படுகிற பொழுது கம்பனைப் பற்றிய படிமமே மாறுகிறது. இலக்கியம் தமிழ் நாட்டின், தமிழ் மக்களின் சமத்துவப் போராட்டத்துக்கு வழி வகுக்கின்ற ஒன்றாக மாறுகிறது. மாறுகிற அதே வேளையில், ஜீவா செய்த இன்னொரு மிகப் பெரிய முயற்சி என்னவென்றால், அல்லது முக்கிய அலுவல் என்னவென்றால், நாங்கள் இன்று சொல்லுகிற செந்நெறி இலக்கியத்துக்கும், நாட்டுப்புற இலக்கியத்துக்கும் உள்ள இடைவெளியைக் குறைத்தது. அந்தக் காலத்தில் மக்கள் தாங்கள் வாய்விட்டுப் பாடுகின்ற பாடல்களின் மெட்டிலே இவர் பாடல் பாடுகிறார். இந்தப் பண்பு பாரதியிலேயே காணப்படுகிறது. அது ஜீவாவில் இன்னொரு கட்டத்தை எய்துகிறது. இந்த நிலையில் தான் ஜீவா அதைச் செய்தார்.

நண்பர்களே, நாற்பது ஐம்பதுகளில், அறுபதுகளில் இது தான் நிலைமை என்றால், 40 வருடங்களின் பின்னர் 2002ம் ஆண்டாகிய இன்று உலகின் நிலை என்ன? சர்வதேச நிலையில் சில முக்கிய விடயங்கள் ஏற்பட்டுள்ளன. 70-90களில் மேலோங்கி நின்ற பின்நவீனத்துவ வாதம் வலுவிழந்து விட்டது. இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் தான் 'டைம்ஸ் லிட்டரரி சப்ளிமெண்ட்' வாசித்துக் கொண்டிருந்த பொழுது, அதில் வந்த ஒரு கடிதத்தின் தலைப்பு என்னைமிக ஆழமாக சிந்திக்க வைத்தது. Is Post mordernism dead? பின் நவீனத்துவம் இறந்து விட்டதா என்று கேட்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து பல கடிதங்கள் அங்கே எழுதப்பட்டிருந்தன. பின் நவீனத்துவம் இருக்கிறதா? வலு இழந்து விட்டதா? இல்லையா என்பது பற்றிய பேச்சுகள் அங்கே இடம் பெற்றிருந்தன. பின் நவீனத்துவம் வலுவிழந்து இருப்பதற்கான காரணம் என்னவென்றால், அது 70-கள், 80-கள், 90-களின் முற்பகுதி வரையும் செய்து வந்த தன்மையை அது இழந்து விட்டது. அதாவது அது முதலாளித்துவத்தின் ஒரு உருமாற்றத்தின் வடிவம். அதன் தத்துவார்த்த வெளிப்பாடு என்பது 90-களின் பிற்பகுதியில் நன்கு வெளியாயிற்று. டெரி ஈகிள்டன் சொன்னார், பின்நவீனத்துவத்தின் உள் நுழைந்து, அதனைப் பொத்துக் கொண்டு வெளியே வந்து விடுங்கள் என்று. ஒன்று தெரிகிறது. இந்த குளோபலைசேஷன் என்ற சொல்லப்படுகின்ற பூகோள மயமாக்கத்தின் ஒரு தத்துவார்த்தப் பிடியாக அது முன்னுக்கு வந்தது. அந்தப் புயல் ஓய்ந்து, காற்று அடித்து முடிந்து விட்டாலும் கூட, அது விட்டுச் சென்றுள்ள சில படிப்பினைகள் மார்க்சியவாதத்தை தொடர்ந்து பேணுகிறவர்களுக்கு, அதில் தொடர்ந்து நம்பிக்கை வைத்திருப்பவர்களுக்கு, அதில் தொடர்ந்து புலமை ஈடுபாடு கொண்டுள்ளவர்களுக்கு முக்கியம். ஒன்று நாங்கள் எங்களுடைய சிந்தனைகளை ஒற்றைக் கோடுகளில் வைத்துக் கொள்ளக் கூடாது. நாங்கள் எளிமைப்படுத்தப்பட்ட விதிகளுக்கு இறங்கி விடக் கூடாது. சுருக்கமாகச் சொன்னால், நாங்கள் சாராம்ச வாதத்துக்கு (reductionism) ஆளாகிவிடக் கூடாது. ஒரு விடயத்தை விளங்குகிற போது, அதனுடைய சிக்கல்பாடு முழுவதையும், சேர்த்து விளங்க வேண்டுமே தவிர, அதனைத் தெளிவுப்படுத்தப் போகிறோம் என்று சொல்லி அதனை எளிமைப்படுத்தி, விடயத்தின் தன்மையை மாற்றிவிடக் கூடாது. தெளிவுபடுத்தப் போய், சிக்கலே இல்லை என்று சொல்லுகிற நிலைமைக்கு ஆகிவிடக் கூடாது. அது மிக முக்கியம்.

மற்றது பன்முகப்பாட்டை (plurality) நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். தமிழைப் பொறுத்த வரையில், நாம் தமிழகத்தின் ஒட்டு மொத்தமான சம பேதங்கள் பற்றி (In equality) ஆராய்ந்து முற்று முழுதான சமூக விடுதலைக்கு வேண்டிய செய்திகளை முன் வைக்க வேண்டும். இந்த முற்று முழுதான சமூக விடுதலை என்கிற பொழுது அது எவ்வாறு மேற்கு வங்கத்திலும் கேரளத்திலும் செய்யப்பட்டது என்று மேற்கு வங்கத்து மக்கள், கேரளத்து மக்கள் நம்புகிறார்கள் என்பதற்கான நடைமுறைகளை குறியீடுகளை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். மார்க்சீயமும் இன - மொழி அடையாளமும் ஒன்றுக் கொன்று முரணாக வேண்டியதில்லை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

சோவியத்யூனியன் வீழ்ந்த சூழ்நிலையில் பூகோள மயமாக்கத்தின் முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இது மிக மிக முக்கியமானது என்று நான் கருதுகிறேன். பூகோள மயமாக்கலின் பண்புகளைத் தயவு செய்து மனதில் வைத்துக் கொள்ளுங்கள். ஒன்று அது உலகப் பொதுவான சந்தைப் பொருளாதாரம். (Market Economy) அதில் உற்பத்தி எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் சந்தைப்படுத்துதல். சந்தைப்படுத்துதல் அளவுமுக்கியம் அதன் நிர்வாகம். கடந்த 20- 25 வருடங்களுக்குள் தான் நாங்கள் இன்று நிர்வாகம் (Management) என்ற அறிவியலை வளர்த்திருக்கிறோம். இது சும்மா வளரவில்லை. உலக முதலாளித்துவ வளர்ச்சியோடு வளர்ந்திருக்கிறது. அதற்கு இது தேவைப்படுகிறது. Whom do you manage? For what? For whom? இவை எல்லாம் மிக ஆழமான கேள்விகள்.

மற்றது சமதர்ம நாடுகளின் வீழ்ச்சி. உண்மைகளை உண்மைகளாகவே ஏற்றுக் கொள்ளுவோம். சமதர்ம நாடுகளின் வீழ்ச்சி மாற்றங்கள் மற்ற எல்லாவற்றையும் பார்க்க மிக முக்கியமானது. பூகோளமயமாக்கலின் பின்னர், ஏகாதிபத்தியம் என்பது Ford Company, Transactional Capital ஆக மாறியதாகும். நாம் முதலாளித்துவம் என்று சொல்லாமல் மூலதனவாதம் என்று சொல்லியிருந்தால் இந்தப் பிரச்சனை ஏற்பட்டிருக்காது. ஆரம்பத்திலேயே மூலதனவாதம் என்று நாம் சொல்லி யிருப்போமேயானால் இதனுடைய இடர்ப்பாடுகள் எல்லாம் நமக்கு விளங்கியிருக்கும். இதில் ஏற்பட்டிருக்கிற முக்கியமான விடயங்களில் ஒன்று இனத்துவ அல்லது இனக்குழும அடையாளங்கள் காலனித்துவ நாடுகள், சுதந்திரம் பெற்ற நாடுகள் எல்லாவற்றிலுமே

மாற்றங்கள் ஏற்பட்டதன் பின்னர், பின்காலனித்துவ நிலையில், இந்த Ethnic Identity ஒரு முக்கியமான பிரச்சனை ஆயிற்று. தென் ஆசியாவிலுள்ள இலங்கையை மாத்திரம் நான் சொல்லவில்லை. கருதவுமில்லை. ஐரோப்பாவில் செக்கோஸ்லவேக்கியாவில் நடந்ததை நான் சொல்லுகிறேன். அங்கு செர்புகள் கொரேசியர்கள் என்று போராட்டம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்தச் சிறு சிறு துண்டங்களாகப் போகின்ற தன்மைகள் சாதிமதக் கலவரங்களாகத் தென்னாசியாவில் வேறு சில நாடுகளிலே பிளவுண்டு கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் உள்ள ஒரு முக்கியமான முரண்பாடு என்னவென்றால், இவ்வாறு இனரீதியாக இனத்துவ அல்லது இனக்குழும ரீதியாகச் சிந்திக்கிற அதே வேளையில், இந்த சர்வதேச பூகோளமயப்பாடு நமக்கு 'மாஸ்கல்ச்சர்' என்கின்ற ஒன்றைத் தந்திருக்கிறது. அந்த மாஸ்கல்ச்சர் என்பது வெகுஜனப் பண்பாடு. இது மாஸ் மீடியா மூலம் வருகிறது. அதனுடைய பிரதான வாயில் ஒரு தனிப்பாடமாக, ஒரு தனி அறிவியலாக வளர்ந்துள்ளது. ஒரு காலத்தில் கம்யூனிகேஷன் என்ற சொல் போக்குவரத்தைக் குறிப்பதாக இருந்தது. இன்றைக்கு கம்யூனிகேஷன் என்பது முற்றிலும் மாறுபட்டது. Send a Message to Receiver and Feed back. மாஸ்மீடியாவினால் இது ஏற்பட்டது. இந்த முரண்பாட்டை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். உள்ளூர் நிலையில் குழுமப் போராட்டங்கள், சர்வதேச நிலையில் இவற்றையெல்லாம் ஊடறுத்துக் கொண்டு வருகின்ற ஒரு பொதுவான வெகுஜனப் பண்பாடு. தயவு செய்து அதை மக்கள் பண்பாடு என்ற சொல்லாதீர்கள். ஏனென்றால், மக்கள் என்பது குறிப்பாக இடது சாரிச் சிந்தனையின் அடிப்படை மக்களைக் குறிக்கும். Peoples war, Peoples liberation மாதிரி அல்ல. Peoples media அது மாஸ்மீடியா எங்களுடைய தனித்துவங்களைப் பார்ப்பதில்லை. எங்களுடைய சட்டையளவைதான் பார்க்கும். என்னுடைய பெயரையும் ஊரையும் அதற்கு தெரியாது. நான் எத்தனை முழத்தில் சட்டை போடுகிறேன், என்ன மாதிரியான கைக்குட்டை வேண்டும் என்று தான் தெரியும். இதை தயவு செய்து மனதில் வைத்துக் கொள்ளுங்கள். ரகுநாதன் புதுமைப்பித்தன் காலத்திலிருந்த தமிழ்நாட்டின் மாஸ்மீடியா சூழ்நிலைக்கும், ஜீவா காலத்திலிருந்த மீடியா சூழ்நிலைக்கும் இன்றைக்கு இருக்கிற Mediaவுக்கும் உள்ள மிகப் பெரிய வித்தியாசத்தை தயவு செய்து மனதில் வைத்துக் கொண்டால் தான் இவற்றை நீங்கள் புரிந்து கொண்டால் தான், நீங்கள் கலை இலக்கியப் பெருமன்றத்தின் ஊடாக என்ன செய்யலாம் என்று சிந்திக்கலாம்.

1950-களில் ரேடியோ இருந்தாலும் அது ஒரு முக்கியமான Articulate ஆன Medium ஆக இல்லை. அச்சு ஊடகம் தான் நமக்கு முக்கியம். முற்று முழுதாக அது இருந்தது. அதற்குள்ளாகத் தான் இந்து, அதற்குள்ளாகத்தான் தினமலர், தினத்தந்தி எல்லாம். அந்த Print - Media வுக்குள்ளாகத் தான் எங்களுடைய போராட்டம் எல்லாம் நடந்து கொண்டிருந்தது. 60-களில் அவ்வாறு அல்ல. 70-களில் அப்படியல்ல. Print - Media தொடர்ந்து தன்னுடைய நிலையைப் பேணுகிறது பல மாற்றங்களோடு. ஆனால் Film-Media வெகுஜன அபிப்பிராயத்தை மாற்றுகிற சக்தியாக, அச்சு ஊடகத்தைக் காட்டிலும் வலுவான சக்தியாக மாறி விட்டது. அந்த Mediaக்கு எதிரான போராட்டங்களை இவர்கள் செய்யவில்லை. தாமரை, செம்மலர் செய்ய முயன்றார்கள். நடக்கவில்லை. நாங்கள் என்ன பேசுகிறோம், என்ன எழுதுகிறோம் என்பது மாத்திரம் அல்ல, எந்த Mediaத்தில் எழுதுகிறோம், பேசுகிறோம் என்பது முக்கியம். கம்யூனிக்கேசன்ல லாஸ்வெல் என்று ஒருத்தர் இருக்கிறார். அவர் சொல்லுவார். Who Says? What, For Whom? with what effect? அதுதான். தொல்காப்பியச் சூத்திரம் மாதிரி நன்னூல் சூத்திரம் மாதிரி, கம்யூனிக்கேஷனுடைய சூத்திரமே இதுதான். போதாது. அது 70-களிலே போதாது. ஏனென்றால் திரைப்பட ஊடகம் தமிழ் நாட்டினுடைய அரசியலையே மாற்றிற்று.

இரண்டாயிரத்தில் இன்று அச்சு ஊடகத்தின் நிலை என்ன? தினத்தந்தியைப் பாருங்கள். தினமணியைப் பாருங்கள். நான் சொல்லுவதற்காக நண்பர்கள் மன்னிக்க வேண்டும். தினமணி தினத்தந்தியாகப் பார்க்கிறது. தினத்தந்தி தினமணியாகப் பார்க்கிறது. இன்று தினத்தந்திக்கு நான் ஒரு தொடர்பியலாளன் என்ற முறையில் பேசுகிறேன். அன்னிய நாட்டு விடயங்கள் புதிய, பரந்துபட்ட விடயங்கள் பற்றிப் பேச வேண்டிய தேவை இருக்கிறது. அதே வேளையில் கலைமணி என்ற ஒரு பக்கத்தைப் போட வேண்டிய அவசியம் தினமணிக்கு வருகிறது.

இந்த மாற்றம் இருக்கிறதே இது வெறுமனே ஏற்பட்ட மாற்றம் அல்ல. நம்முடைய தொடர்பியல் முறைமையில் ஏற்பட்ட பெரிய மாற்றம். இதனால் சில மிக முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதைத்தான் நான் மீள்சொல்ல விரும்புகிறேன். இப்போது பல நண்பர்கள் இதனை மக்கள் தொடர்பியல் என்று சொல்லுகிறார்கள். நான் அவர்களை மறுக்கிறேன். இந்த வெகு ஜனம் என்ற சொல் ஒரு வேளை சமஸ்கிருதம் என்பதால் நீங்கள் எதிர்க்கலாம். ஆனால் இந்த

மாஸ் என்ற சொல்லை தயவு செய்து கொண்டு வாருங்கள். பீப்பிள் என்ற சொல்லைக் கொண்டு வராதீர்கள். ஏனென்றால் இன்று நடக்கின்ற மீடியா போராட்டங்கள், ஊடகப் போராட்டங்கள் காரணமாக இன்று நடக்கின்ற சந்தைப் போராட்டங்கள் காரணமாக, இன்று நடக்கின்ற உலக முதலாளித்துவப் போக்கு காரணமாக இந்த மாஸ்க்குள் (Mass) இந்தக் திறவுக்குள் மக்கள் ஒடுங்கி விட்டார்கள். இதை நான் வெறும் உலகமாகச் சொல்லவில்லை. நான் உலகப் பொதுவான மீடியா கல்சரைச் சொல்லுகிறேன். நமது பாரம்பரியத்தில் பாடுவதென்றால் இருந்து தான் பாடுவார்கள். கேட்பவன் இருந்து ரசிப்பான். ஆனால் இன்று தமிழ்த் திரைப்படத்திலே ஒரு பாடகன் வருவானேயானால், அவன் மைக்கிலே நின்று பாடுகிற ஒரு பாடகனாக இருப்பான். நாங்கள் எவருமே இதைத் தட்டிக் கேட்டது (Question பண்ணினது) கிடையாது. கேட்க முடியாது. ஏனென்றால் அந்த மாற்றம் இங்கு நடக்க வில்லை. பாப் இசையில் நடந்தது. அபேயில் நடந்தது.. பொனியேன்ல நடந்தது. பீட்டில்ஸ்ல நடந்தது. அந்த வருகையை எங்களால் நிப்பாட்ட முடியவில்லை. ஆக, நாங்கள் நினைக்கிறது மாதிரியல்ல, இந்த Media Culture மிகப் பெரிய மாற்றங்களைச் செய்கிறது.

இந்த நிலையில் இதனைச் சிறப்பாக நமது வாசிப்பு மாற்றத்தில் காணலாம். இன்றைய ஜன ரஞ்சக சஞ்சிகைகள் தொடர்கதைகளை நம்பி இல்லை. சிறுகதைகள்ளை நம்பியில்லை. நாவல்களை நம்பியில்லை. 70-களில் அப்படியல்ல. 60-களில் அப்படியல்ல. இன்றுள்ளவை எத்தனை features-கள் உள்ளன என்பதை நம்பி இருக்கின்றன; எத்தனை இன்டர்வியூஸ் என்பதை நம்பி இருக்கின்றன. இதில் சுவராஸ்யம் என்ன தெரியுமா? features என்பதற்கு இன்னும் தமிழிலே நல்ல சொல்வரவில்லை. அப்போ இந்த இதழ்களின் மாற்றத்திலே நாங்கள் பெரும் மாற்றங்களைக் காணுகிறோம். இதழ்கள் சிறுகதைகளை, நாவல்களை நம்பியிருக்காமல் வெவ்வேறு features-யை நம்பி இருக்கின்றன. அவை ஒவ்வொன்றுமே அரசியலைப் பற்றி, கலையைப் பற்றி மற்றும் பல்வேறு விடயங்களைப் பற்றி பேசுகின்ற ஊடகங்களாக மாறி வருகின்றன. இதனுடைய பிரதானமான தன்மையை எங்கே காணுகிறோம் என்றால், காத்திரமான அல்லது சீரியசான இலக்கியத்தைப் பேசுவதற்கு இந்த இதழ்களிலே இடம் இல்லாது போனதன் காரணமாக, இலக்கியம் என்பது அல்லது இலக்கிய விடயங்கள் என்பது இன்று பேசப்படுவது இலக்கியக்காரர்களின் மொழிகளில் சொன்னால் சிற்றிதழ்களில் Little Journals It is no more the

main stream journal. சுருக்கமாகச் சொன்னால் காத்திரமான இலக்கியம் இன்று ஒரு minority culture. இன்று அது ஒரு சிறுபான்மை பண்பாடாகி விட்டது. அந்த இடத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிற வாசிப்பு எது? ஜெயகாந்தன் விகடனுக்குப் போன பொழுது ஏற்பட்ட இலக்கியக் கொந்தளிப்புகள், இன்று பார்க்கிற பொழுது என்ன கருத்தைத் தருகின்றன? இன்று நாங்கள் அதன் மூலமாய் பெற்ற வாசகர்களைக் கூட இழந்து, இலக்கியம் என்பது இப்பொழுது சிற்றிதழ்களோடு இருக்கிற ஒன்றாகி விட்டது. அந்தச் சிற்றிதழ்கள் காரணமாக, புதுமைப்பித்தன் பாரம்பரியத்தில், ரகுநாதன் பாரம்பரியத்தில் வந்தவர்களுடைய பெயர்களைக் கூட இல்லாமல் செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதை விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை. உங்களுக்குத் தெரியும்.

இன்று வாசிப்பு வேறு. இன்று Popular Journalism முற்றிலும் வேறுபாடான ஒரு நிலைமையில் இருக்கிறது. அதைப் பற்றி யாராவது ஒரு Communication study செய்யணும். இந்த நிலையில் வானொலியின் நிலை Informative ஆக இருக்கிறது. ஆனால் ஒன்று, இன்றைக்கு நீங்கள் வாங்குகிற எந்த ரேடியோவும் ஆடியோ கேசட் இல்லாமல் இல்லை. இன்றைக்கு வானொலிப்பெட்டி என்பது வெறுமனே செய்தி கேட்கிற கருவி மட்டும் அல்ல. அதுக்குள்ளே ஒரு டேப்ரிக்கார்டர் இருக்குது. இன்னைக்கு உள் Culture-ன் ஒரு பகுதி ஆடியோ கேசட். அச்சு ஊடகம் மாத்திரம் அல்ல. நான் பத்து வருடங்களுக்கு முன்னர் படுக்கப் போகிற பொழுது ஒரு புத்தகத்தை வாசிச்சிட்டு படுப்பேன் என்றால், இப்பொழுது நான் படுக்கப் போகிற பொழுது எனக்குப் பிடித்தமானவருடைய பாட்டைக் கேட்டுக் கொண்டு படுக்க விரும்புகிறேன். அல்லது ஏதோ ஒரு உரை ஒன்றைக் கேட்டுக் கொண்டு படுக்க விரும்புகிறேன். இந்த media extension யை இந்த விரிவை நாங்கள் மறந்து விடக் கூடாது. அதிர்ஷ்டவசமாக சென்னையில் தமிழ்நாட்டில் வானொலி இன்னும் தனியார் மயமாக்கப்படவில்லை. இலங்கையில் செய்துவிட்டார்கள். வந்தால் தான் தெரியும். இந்த F.M. சேனல் என்பது எத்தனை மாற்றங்களைக் கொண்டு வரும் என்பது. அது BBCக்கே சவாலானது.

தொலைக்காட்சி இவை எல்லாவற்றையுமே மாற்றியுள்ளது. தொடர் நாடகங்கள், அவற்றினுடைய தன்மைகள், எல்லாமே மாறியுள்ளன திரைப்படத்துக்கும் தொலைக்காட்சிக்கும் இடையே ஒரு பெருத்த வேறுபாடு உண்டு. திரைப்படத்தின் மொழி வேறு,

தொலைக்காட்சியின் மொழி வேறு. இதனுடைய குறியீடுகள் வேறு. அதனுடைய குறியீடுகள் வேறு. பெண் பாத்திரங்கள் treat பண்ணப்படுகிற முறையிலே ஆராயப்படுகிற முறைமையிலே இந்த வித்தியாசத்தை நீங்கள் சரியாகக் காணலாம். எனக்கு அது மாத்திரம் அல்ல முக்கியம். எனக்கு முக்கியம் என்னவென்றால், இன்றையப் பாடம் text என்பது Image + Text அது டிவியால் வந்தது.

அப்போ நாங்கள் எந்த mediaக்கள் மூலம் செல்ல வேண்டும் என்பது முக்கியமாகிறது. ஆடியோ கேசட் இல்லையென்றால், வி.சி.ஆர் இல்லையென்றால் எல்லாமே மாறி விடும். பத்து வருடங்களுக்கு முன் புகைப்படம் பிடித்திருந்த இடத்தை இன்ற வி.சி.ஆர். பிடித்து விட்டது. ஹோம் மூவிஸ் எங்களுடைய முக்கியமான பண்பாட்டு அம்சம் ஆகிவிட்டது. இந்த நிலையில் நான் சொல்லுவதற்கு மன்னிக்கவும். தமிழ் அடையாளங்கள் பற்றிப் பேசியவர்கள் பேசுபவர்கள் கூட தமிழ் மொழிக் கல்வியில் சிரத்தைக் காட்டவில்லை.

இந்த முரண்பாடுகளை - இதன் அடிப்படையான சர்வதேச மூலதனவாதத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இப்பொழுதுதான் கேள்வி வருகிறது. டால்ஸ்டாய் கேட்டு காந்தி வியந்த வினா. இனி நாம் செய்ய வேண்டியது யாது? காந்தி அந்தப் புத்தகத்தை மிக ஆழமாக வாசித்தார் என்று சொல்லுவார்கள். அதே கேள்வி நம் முன்னும் நிற்கின்றது என்று கருதுகிறேன். இந்தக் கட்டத்தில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.. மார்க்சீய விமர்சனத்தில் ஒரு முக்கிய அம்சம் என்னவென்றால், மார்க்சீயம் ஆட்சிச் செயல்பாட்டுக்கு வந்த நாடுகளில் புரட்சி வந்த பொழுது இருந்த மார்க்சீய விமர்சனத்துக்கும், புரட்சியின் பின்னர் அந்த ஆட்சிகள் நிர்ணயப்படுத்தப்பட்டதன் பின்னர் வந்த விமர்சன முறைக்கும் இடையில் வேறுபாடு உண்டு. ஏறத்தாழ 1905 முதல் 1932 வரை சோவியத் யூனியனில் எத்தனையோ கருத்துகள் இருந்தன. ஆனால் 32-ன் பின்னர் அது ஒரு ஒற்றை விதி ஆக்கப்படுகிறது. அந்த பழைய நிகழ்ச்சி இல்லாமல் போய்விடுகிறது. சீனாவில் 42ல் ஏனான் மாநாட்டில் அரசியல் முதலாவது, கலை இரண்டாவது என்று சொன்னது, பிற்காலத்தில் எத்தகைய பிரச்சனைகளைக் கிளப்புவதற்குக் காரணமாக இருந்தது என்பது நமக்குத் தெரியும்.

இந்த நிலைமைகள் காரணமாக என்ன நடந்தது என்றால், மார்க்சீய ஆட்சி வராத ஐரோப்பிய நாடுகளில் புதிய புதிய பிரச்சனைகள் வர அந்த நாடுகளிலே வாழ்ந்த மார்க்சீயச் சிந்தனையாளர்கள் அவற்றை எதிர்கொள்ள சில முக்கியமான கருத்துக்களை முன் வைத்தார்கள். அது ஹங்கேரியில் லூக்காகஸ்சோடு ஆரம்பித்தது. பின்னர் ஹங்கேரி போய் விடுகிறது. கிராம்ஸ்சியோடு ஆரம்பிக்கிறது. ப்ராங்க் பர்ட் ஸ்கூலில், ஜெர்மனியில் பிரக்ட்டோடு ஆரம்பிக்கிறது. பிரிட்டனில் ரேமண்ட் வில்லியம்சோடு வருகிறது. பிரான்சில் அல்தூசரோடு வருகிறது. இவ்வாறு பரந்துபட்டு வருகிறது. நாங்கள் இந்த மாற்றங்களுக்கெல்லாம் முகம் கொடுக்கிற பொழுது, நாம் அந்த அந்த நாடுகளில் அவர்கள் ஏற்படுத்திய தாக்கம் காரணமாக வந்த எதிர்வினைகளே அவை (Responses) என்று நோக்க வேண்டுமே தவிர, அவை மார்க்சீயத்தை திரிபுபடுத்துவதற்காக வந்தவை அல்ல என்பது இன்று பின்னோக்கிப் பார்க்கிற பொழுது நமக்குத் தெரிகிறது. கிராம்ஷி Culture என்பதை அழுத்த வேண்டி வந்ததற்குக் காரணம் என்னவென்றால், இத்தாலியில் பொருளாதாரப் பிரச்சனையைக் காட்டிலும் பண்பாட்டு பிரச்சனைகள் தேர்தலில் வெற்றிக்குக் காரணமாக அமைந்தன. சிறைச்சாலையிலிருந்து இதை ஆராய்கிறார் கிராம்ஷி. ஒரு கல்ச்சர் எவ்வாறு சில நிலைகளைத் தீர்மானிக்கிறது என்பதைப் பற்றிப் பேசுகிறார். நான் இவற்றைப் பற்றியெல்லாம் இங்கே விரிவாகப் பேசவில்லை. இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒன்றே ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

இப்பொழுது நம்முள்ளே உள்ள பிரச்சனை யாது? இங்கே இரண்டு விசயங்களை நாங்கள் தெளிவுபடுத்திக் கொள்ளல் வேண்டும். மார்க்சீய இலக்கியம் அல்லது முற்போக்கு இலக்கியம் என்று சொல்லுவது இரண்டு விடயங்களைத் தளமாகக் கொண்டது. அதனுடைய அழகியல் இரண்டு விடயங்களிலே தங்கி உள்ளது. ஒன்று உண்மையாயிருத்தல் truth fulness. இரண்டு typicality வகை மாதிரியாக இருத்தல் இந்த ரியலிசம் என்பதைக் கூட truth fulness தான் என்று சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால் இன்றைக்கு naturalism என்பது realism அல்ல. இன்று எந்த நகரத்தை எடுத்துக் கொண்டாலும், நகர்ப்புறத்தை எடுத்து கொண்டாலும் நீங்கள் பார்க்கின்ற இயல்பு நிலை உண்மையான realistic நிலை அல்ல. இதை நான் விரித்துக் கூற விரும்பவில்லை. ஆனால் இந்த வேளையிலே தான் நமக்குப் பிரச்சனை பெரிதாகுகிறது.

இந்த முரண்பாட்டை எவ்வாறு தீர்ப்பது? 70 ஆண்டு கால மார்க்சீய வரலாறு, கம்யூனிச வரலாறு காட்டுகிற ஒரு உண்மை. அந்தந்த பண்பாட்டோடு இணைந்து வாழுதல். அந்த அந்தப் பண்பாட்டினுடைய ஜனநாயக அம்சங்களை வளர்த்து எடுத்தல். மூன்றாவது, இது மிக முக்கியமானது. அந்த அந்த பண்பாடுகளில் உள்ள spiritual valuesகளை கண்டுபிடித்தல். நான் இதை ஆன்மீகம் என்று சொல்லவில்லை. காரணம் என்னவென்றால் Spiritualism is not இறைஆன்மீகம். உயிரை நம்பாத பௌத்ததிலும் Spiritualism உண்டு. The Spirit of Man என்று மார்க்ஸ் சொன்னார். The Sprit of a spiritless world, the heart of a heartless world. அந்த Spritualism அந்த உயிர்ப்பு நிலை, அந்த உயிர்ப்பு நிலை பற்றிய விடயங்களை அறிய வேண்டும். மற்றது இருப்பு நிலையில் Existential நிலையில் மக்களுக்கு உள்ள துயர்களை, துன்பங்களை சுகதுக்கங்களை அறிய வேண்டும். ஏன் அவர்களுக்குச் சில விடயங்கள் தேவைப்படுகின்றன என்று தெரிய வேண்டும். சமவீனங்களை (ஏற்றத்தாழ்வுகளை) விளங்கிக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்கிற பொழுதுதான் நாம் உண்மையான மக்களைக் காண்போம். அப்படிச் செய்கிற பொழுது தான் நாங்கள் புதிய இலக்குகளைக் காணலாம். இவை சுலபமாகச் செய்யப்படத்தக்கவை அல்ல.

உலக நிலை இன்று எம்மை ஒரு நிலையில் மிகச் சிறிய குழுக்களாகவும், இன்னொரு நிலையில் ஒரு சர்வதேசமயத்தில் வெறும் தலையில்லாத புள்ளிகளாகவும் ஆக்கியுள்ளது. இந்த முரண்பாட்டிலிருந்து மனித விடுதலை பெறவேண்டுமேயானால், அந்த அந்தச் சூழலில் இருந்து அந்த உயிர்ப்பு நிலையை இனம் கண்டு அதிலுள்ள இருப்புத் (Extentialist) தன்மைகளுக்கெல்லாம் பதில் கூறி வெளியிலே வரத்தக்க உறுதி - திறன் எந்தப் பண்பாட்டுக்கு உண்டோ, அந்தப் பண்பாடு வரும். அது தமிழுக்கு உண்டு. அப்படியான எழுத்தாளர்கள், இலக்கியங்கள், நம்மிடையே உண்டு. அதனைச் செய்தார்கள். செய்வார்கள். அதற்குக் கலை இலக்கியப் பெருமன்றம் போன்ற நிறுவனங்கள் முன் நிற்க வேண்டும்.

***

உலக நிலை இன்று எம்மை ஒரு நிலையில் மிகச் சிறிய குழுக்களாகவும், இன்னொரு நிலையில் ஒரு சர்வதேசமயத்தில் வெறும் தலையில்லாத புள்ளிகளாகவும் ஆக்கியுள்ளது. இந்த முரண்பாட்டிலிருந்து மனித விடுதலை பெறவேண்டுமேயானால், அந்த அந்தச் சூழலில் இருந்து அந்த உயிர்ப்பு நிலையை இனம் கண்டு அதிலுள்ள இருப்புத் (Extentialist) தன்மைகளுக்கெல்லாம் பதில் கூறி வெளியிலே வரத்தக்க உறுதி - திறன் எந்தப் பண்பாட்டுக்கு உண்டோ, அந்தப் பண்பாடு வரும். அது தமிழுக்கு உண்டு. அப்படியான எழுத்தாளர்கள், இலக்கியங்கள், நம்மிடையே உண்டு. அதனைச் செய்தார்கள்; செய்வார்கள். அதற்குக் கலை இலக்கியப் பெருமன்றம் போன்ற நிறுவனங்கள் முன் நிற்க வேண்டும்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்
பாலன் இல்லம்,
19, சிவாஜி கணேசன் சாலை,
சென்னை - 600 017.